குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.281/2022

அ.சா.4

2024–ம் ஆண்டு டிசம்பர் 18–ம் தேதி புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 04–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஜயன் | ஜாதி | |
| தந்தை பெயர் | செட்டியார் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.17 மணி,

Accused Siva absent. Petition U/s.317 Cr.P.C filed and allowed. Advocate Mrs.R.Divya present for Advocate Mr.Thirumugam for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான், இரும்பாலையில் குடியிருந்து, செட்ரிங் தொழில் செய்து வருகிறேன். கடந்த 12.01.2020 ஆம் தேதி இரவு 08.00 மணியளவில் மாரமங்கலத்துப்பட்டியில் இருந்து தாரமங்கலம் செல்லும் சாலையில் அம்மன் தியேட்டர் அருகே நின்று கொண்டிருந்தேன். அப்போது பல்சர் இருசக்கர வாகனம் சேலம் – தாரமங்கலம் சாலையில் தாரமங்கலம் நோக்கி வேகமாக வந்து, சத்தம் கேட்டது. அருகில் சென்று பார்த்தபோது, நடு சாலையில் நின்று கொண்டிருந்த லாரியின் பின்னால் இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது.

2. இருசக்கர வாகனத்தில் வந்த நபர் அவருக்கு எதிரே வந்த, வாகனத்தை பார்த்து சாலையின் இடதுபுறமாக ஒதுங்கியபோது, சாலையில் நின்றிருந்த லாரி தெரியாததால் அதன் பின்னால் மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். இருசக்கர வாகனத்தில் வந்த நபருக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டது. பின் தலையில் ரத்தம் வந்து கொண்டிருந்தது. இருசான் காயமடைந்த நபரின் அப்பாவிற்கு தகவல் சொன்னார்.

3. காயமடைந்த நபரின் அப்பா கணேசன் 15 நிமிடத்தில் சம்பவ இடத்திற்கு வந்தார். வந்து, பிரவீன்குமாரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். மருத்துவமனையில் அவரை பரிசோதித்துவிட்டு, வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக சொன்னார்கள். சம்பவத்தின்போது, பிரவீன் குமார் ஓட்டிச் சென்ற பல்சர் இருசக்கர வாகனத்தின் பதிவெண் டி.என்.52 எல் 2017 மற்றும் விபத்து ஏற்படுத்திய லாரியின் பதிவெண் டிஎன்.52 ஏ 0303 ஆகும். மேற்படி, லாரியின் ஓட்டுநர் குறித்த விபரம் எனக்கு தெரியாது. போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 01.24 மணி,

ஓம்/–ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.